www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

## PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

GERMAN BRANCH

PEOPLES LIBERATION ORGANIZATION THAMILEELAM DEMOLISH ALL REPRESSION PLOTE

## இன்றைய நிலையில் எமது நிலைப்பாடு

இன்றைய போராட்ட நிலைமைகளையும் அதில் எமது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தும் நோக்கில் இவ்வறிக்கையின் மூலம் மீண்டும் உங்களைச் சந்திக்கின்றோம்.

இன்று நாம் தமிழ் மக்களின் துரோகிகளாகவும், இலங்கை அரசின் வால்பிடிகளாகவும் செயல்படுவதாக வெளிநாடுகளில் குறிப்பாக புலிகளினாலும், தம்மை முற்போக்குவாதிகளாகவும், அராஜக எதிர்ப்பு வாதிகளாகவும் சஞ்சிகைகள் மூலம்தனம் காட்ட முற்படுவோராலும் வர்ணிக்கப்படுவதை நாம் நன்றாக அறிவோம்.

நாம் இலங்கை அரசுடன் புலிகள் தவிர்ந்த தமிழ் முஸ்லீம் அரசியற் கட்சிகளுடனும் இணைந்தும், தனியாகவும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கின்றோம் என்பதையோ, இலங்கை ராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில்குறிப்பாக வவுனியா, மன்னாரிலும் மற்றும் கிழக்கு மாகாணத்திலும் மக்களின் பாதுகாப்பு, புனர்நிர்மானம்,, சமாதானம் போன்ற தேவைகளுக்காக இணைந்து செயல்படுகிறோம் என்பதை மறுப்பதற்கில்லை.

விடுதலைப்போராட்டத்தில் ஆயுதரீதியான யுத்தத்தில் பல வெற்றிகளை புலிகள் சாதித்திருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். ஆயினும் இவ்வெற்றிகள் இலட்சியத்தைப்பலப்படுத்தி போராட்டத்தை ஒரு சரியான திசைக்கு இட்டுச் செல்லவில்லை என்பதே எமது கருத்தாகும். அதற்குப் பதிலாக இவர்களின் வழிமுறைகள் மக்களின் மேல் ஆயுத அடக்குமுறையை மேலும் அதிகமாக்கியுள்ளது. மக்களின் கருத்துச் சுதந்திரத்தை முற்றாக அழித்துள்ளது. இன்று எமது மக்களையும் போராட்ட உணர்வுள்ள இளைஞர் சக்திகளையும் வெளிநாடுகளில் அகதிகள் என்கிற பெயரில் சர்வதேசக் கூலிகளாக மாற்றியுள்ளது. எம்மண்ணில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களையும் வேலை வாய்ப்புகள் அற்றவர்கள் ஆக்கி தமது அன்றாட அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட அரசிடமும் மற்ற சமூக சேவை ஸ்தாபனங்களிடமும் கையேந்தி நிற்கும் நிரந்தர அகதிகள் ஆக்கியுள்ளது.

போராட்டத்தில் மக்களை இணைக்கின்றோம் என கூறிக் கொண்டு மக்கள் உயிர் வாழ்வதற்காக அரசினாலும் சமூக சேவை ஸ்தாபனங்களினாலும் வழங்கப்படும் மா, அரிசி, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கூட வினியோகம் என்ற பெயரில் பலவந்தப் பறிப்புச் செய்கின்றனர். யுத்த நிதி என்ற பெயரில் கப்பம் வாங்குகின்றனர். வடபகுதியை விட்டு வெளியே செல்வதற்கான அனுமதி என்னும் பெயரில் பணம் வசூலிக்கப்படுவது மட்டுமல்லாமல் கூட்டணி உட்பட மற்றைய தமிழ் அமப்புக்களின் ஆதரவாளர்கள் அதிகம் உள்ளதாகப் புலிகளால் கருதப்படும் பகுதிகளில் வாழ்வோருக்கு இழுத்தடிப்புக்களும் செய்கின்றனர். தென்னிலங்கையில் அரசசேவைகளில் இருப்பவர்கள் கூட அவற்றை விட்டு விலகும்படி அவர்களின் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் பயமுறுத்தப்படுவதாக நம்பிக்கையான செய்திகள் மூலம் அறிகிறோம். இதன் மூலம், அவர்களையும் வெளிநாடுகளில் அகதிகள் என்ற பெயரில் அவர்களிடமும் பயமுறுத்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லீம் பிரச்சினையானது நடைமுறைகளை மேலும் சிக்கலாக்கியுள்ளது. இந்நிலை காரணமாக எமது ஸ்தாபனத்தில் உள்ளவர்கள் சிலர் மக்கள் விரோத நடவடிக்கைகளிலும் துரோக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டமைக் காக அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டும் உள்ளது. இ,வ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் எம்மவர்கள் பற்றி ஸ்தாபனத்திற்கு தெரியப்படுத்துவது மக்களின் பொறுப்பாகும்.

தமிழீழப்போராட்டத்தை சீரழித்து இந்நிலமைக்கு இட்டுச் சென்றதன் பெரும் பொறுப்பையும் துரோகத்தனத்தையும் தமிழீழவிடுதலைப்புலிகளே பொறுப்பேற்கவேண்டும். தமது ஆயுத சர்வதிகாரத்தை கைவிட்டு சமாதான போக்கிற்கு வராதவரைக்கும் அவர்கள் எமது எதிரிகளாகவே கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே தருணத்தில் எல்லா ஸ்தாபனங்களுக்கும் ஆதரவாளர்கள் உண்டு. ஆதரவாளர்கள் இன்றி எந்தவொரு ஸ்தாபனமும் தமது பணிகளை நிறைவேற்றவோ அன்றி இயங்கவோ முடியாது. சகல ஸ்தாபனங்களினதும் ஆதரவாளர்களே விடுதலைப் போராட்டத்தை வளர்த்ததில் முக்கிய பங்காளர்கள் ஆவர். நாம் எனவே புலிகளின் ஆதரவாளர்களுக்கு எதிரான வர்கள் அல்ல. அதே வேளையில் தமது குறுகிய சுயநல நோக்கங்களுக்காக சகோதா ரப் படுகொலைகளுக்கு காரணமானவர்களை பூண்டோடு அழிப்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

இவற்றிற்காக எம்மை துரோகிககள், அராஜகவாதிகள் என்று வர்ணிக்கப் போகிற வர்களுக்கு நாம் ஒன்றை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறோம். யார் துரோகிகள் என்பதை, என்று துப்பாக்கி அதிகாரம் வீழ்த்தப்பட்டு மக்கள் தங்கள் கருத்துக்களை பயம், மிரட்டல் இன்றி தெரியப்படுத்தும் சூழ்நிலைகள் என்று உருவாக்கப் படுதுகிறதோ அன்று வெளிப்படையாகும் என்பதில் நாம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளோம்

"அனைத்து அதிகாரங்களும் உழைக்கும் மக்களுக்கே"

தொடர்புகட்கு:

S.Jeganathan
Muehl str 11
7100 HN/ Bockingen

தொலைபேசி
07131 30722
0711 2571394

நாளாந்த செய்திச்சேவை: 0711 2573625
0711 6408657

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்